**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி.சி.எண்: 14/2017**

**அ.சா : 1(நாராயணன்)**

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 18.02.2025.**

**எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317–ன் கீழ் மனுதாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**<u>சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் 8 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது வீடு சாலையின் அருகாமையில் உள்ளது. விபத்து நடைப்பெறும்போது நான் வீட்டிற்க்குள் இருந்தேன். சத்தம் கேட்டு ஓடி வந்து பார்த்தேன். நான் வீட்டில் சும்மா உட்காந்து கொண்டிருந்தேன். நான் விபத்து நடந்த இடத்திற்க்கு ஓடி சென்று பார்த்தபோது அங்கு சுமார் 10 நபர்கள் இருந்தார்கள். வண்டி அடித்துவிட்டு அங்கேயே தான் இருந்தது. எனது பெரியப்பாவிற்க்கு பார்வை நன்றாக தெரியும். அவருக்கு 60 வயதிற்க்கு மேல் இருக்கும். கண்பார்வை மங்கலாக தெரியும் என்றால் அவர் கண்ணாடி போட்டு இருப்பார். பார்வை சுமாராக தெரியும்.

2. உடனடியாக மருத்துவமனைக்கு சென்றேன். மருத்துவமனையில் வைத்து இரவு 7.00 மணியளவில் சம்பவத்தன்று விசாரித்தார்கள். அதற்க்கு பின்னிட்டு விசாரிக்கவில்லை. காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன். புகாரை எந்த போலீசார் எழுதினார்கள் என்றால் நாகரசம்பட்டி போலீசார் எழுதினார்கள். போலீசார் எழுதியதில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அதில் என்ன எழுதியுள்ளது என்று அவர்களுக்கு தான் தெரியும். எனது தகப்பனாருக்கு அடிப்பட்டதற்க்கு விபத்து நஷ்ட ஈடு வழக்கு தாக்கல் செய்துள்ளோம். விபத்து நஷ்ட

ஈடு பெறுவதற்க்காக முதல் விசாரணையியல் பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மருத்துவமனையில் விசாரிக்கும்போது போலீசாரிடம் விபத்து ஏற்ப்படுத்திய நபரை பற்றி நான் கூறவில்லை என்றால் சரிதான்.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

SHANMUGANATHAN
Distirct Munsif cum
Judicial Magaistrate
Digitally signed by
SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.**

**(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)**

**சி.சி.எண்: 14/2017**

**அ.சா : 2(சக்திவேல்)**

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 18.02.2025.**

**எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317–ன் கீழ் மனுதாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. காசி, சிவலிங்கம் எனக்கு என்ன உறவுமுறை என்றால் இருவரும் பெரியப்பா ஆவார்கள். எனது வீடு பெரியதளிஅள்ளியில் ஊருக்குள் உள்ளது. நான் விபத்து நடைப்பெறும்போது டீக்கடையில் உட்காந்து கொண்டிருந்தேன். அந்த கடை என்னுடைய கடையாகும். மளிகை கடையில் வியாபாரம் பார்த்துக்கொண்டிருந்தேன். டீக்கடை வெளியே உள்ளது. அதில் மளிகை கடை உள்ளே உள்ளது. கடையில் கல்லாவானது தெற்க்கு நோக்கி உள்ளது. நான் உட்காரும் இடம் டீக்கடைக்கு உள்ளே என்று சொன்னால் நான் வெளியே தான் உட்காந்திருந்தேன். சம்பவம் நடைப்பெறும்போது இருட்டாக இருந்தது என்றால் சரிதான். காசிக்கு 70 வயது இருக்குமா என்றால் வயது தெரியாது ஆனால் வயதானவர். அவருக்கு கண்பார்வை சரியாக தெரியாது என்று சொன்னால் சரியல்ல.

2. விபத்து ஏற்ப்பட்ட சத்தம் கேட்டவுடன் உடனே அங்கு சென்று பார்த்தேன். நான் சென்று பார்க்கும்போது கீழே விழுந்து கிடந்தார் என்றால் சரிதான். விபத்து ஏற்ப்படுத்திய வாகனம் அங்கு தான் இருந்தது. நான் போய் பார்க்கும்போது வெளி ஆட்கள் இருந்தார்கள். சுமார் 7, 8 நபர்கள் இருந்தார்கள். நான் மருத்தவமனைக்கு செல்லவில்லை. நாகரசம்பட்டி காவல் நிலையத்திற்க்கு நான் சென்றிருந்தேன். போலீசார் என்னை எனது கடை அருகே வந்தும், காவல் நிலையத்திலும் வைத்து என்னை விசாரித்தார்கள். காவல் நிலையத்திற்க்கு மறுநாள் காலை 9.00 மணியளவில் சென்றேன். எனக்கு சம்பவ இடத்திற்க்கு அருகே கடை இல்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்தில் இறந்துபோனவர் எனது பெரியப்பா என்பதால் அவருக்கு ஆதரவாக

விபத்து நஷ்ட ஈடு பெறுவதற்க்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. போலீஸ் விசாரணையில் காசியும், அவரது தம்பி சிவலிங்கமும் எனது கடைக்கு எதிராக பேசி கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது ஆஜர் எதிரி விபத்தை ஏற்ப்படுத்திவிட்டார் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

3. காசி என்பவரை 30 அடி தூரம் இழுத்து செல்லப்பட்டார் என்று போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். வழக்கிற்க்காக பொய்யாக சாட்சியம் அளிக்றேன் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

SHANMUGANATHAN
Distirct Munsif cum Judicial Magaistrate
Digitally signed by SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.**

**(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)**

**சி.சி.எண்: 14/2017**

**அ.சா : 3(பழனி)**

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 18.02.2025.**

**எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317–ன் கீழ் மனுதாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து நடைப்பெறும்போது நான் டீக்கடையில் இருந்தேன். எனது வீடு ஊருக்குள் உள்ளது. சத்தம் கேட்டு தான் போய் பார்த்தேன். அப்போது இருட்டாக இருந்தது என்றால் சரிதான். நான் போவதற்க்கு முன்பே அங்கு கூட்டம் சேர்ந்து விட்டது என்றால் சரிதான். அங்குபோய் பார்த்த பிறகு தான் காசி என்று தெரியும் என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை. அவர் இறந்தபிறகு தான் காவல் நிலையம் சென்றேன். போலீசார் சம்பவ இடத்தில் வைத்து என்னை விசாரித்தார்கள். சம்பவத்தன்றே போலீசார் அங்கு வந்தார்கள். அதற்க்கு பின்னிட்டு என்னை விசாரிக்கவில்லை. விபத்து நஷ்ட ஈடு வழக்கு தாக்கல் செய்துள்ளோம். போலீசார் விசாரணையில் எதிரி குடிப்போதையில் வந்து விபத்து ஏற்ப்படுத்தியதாக கூறியுள்ளேன். நஷ்ட ஈடு பெறுவதற்க்காக நான் பார்க்காத சம்பவத்திற்க்கு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**அரசு தரப்பில் மறுவிசாரணை**

1. அரசு தரப்பு வழக்கறிஞர் அ.சா.3 குறுக்கு விசாரணையில் சம்பவத்தை சத்தம் கேட்டு போய் பார்த்ததாக கூறியுள்ளதாகவும், அதை பொருத்து மறுவிசாரணை மேற்கொள்ளவேண்டும் என்று கூறினார். எனவே மறு விசாரணை அனுமதிக்கப்பட்டது.

2. விபத்து நடந்தபோது நான் டீக்கடையில் இருந்தேன். முதல் விசாரணையில் விபத்து ஏற்ப்படுத்திய வாகனம் வேலம்பட்டியில் இருந்து காவேரிப்பட்டினம் நோக்கி

வந்ததாக கூறியுள்ளேன். நான் நின்ற இடத்தில் இருந்து 10 அடி தள்ளி விபத்து ஏற்ப்பட்டது. விபத்து ஏற்ப்பட்டவுடன் நான் அந்த இடத்திற்க்கு சென்றுவிட்டேன். அங்கு இருந்தவர்கள் தான் சம்பவ இடத்திற்க்கு சென்றோம். அதற்க்கு முன்பு அங்கு யாரும் செல்லவில்லை.

**எதிரி தரப்பில் மறு குறுக்கு விசாரணை**

சம்பவதன்று போலீசார் என்னை விசாரிக்கும்போது சம்பவ இடத்தில் இருந்து 10 அடி தள்ளி இருந்த விவரத்தையும் அங்கு இருந்தவர்கள் சென்று பார்த்த விவரத்தையும் நான் கூறவில்லை. உண்மையாக இருந்தால் நான் அப்போதே கூறியிருப்பேன் என்றும், வழக்கிற்க்காக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

SHANMUGANATHAN
Distirct Munsif cum
Judicial Magaistrate
Digitally signed by
SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி.சி.எண்: 14/2017**

**அ.சா : 4(சுகுமார்)**

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 18.02.2025.**

**எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317–ன் கீழ் மனுதாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**<u>சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் ஓட்டுனராக பணி செய்து வருகிறேன். எனது வீடு ஊருக்குள் உள்ளது. நான் டெம்போ வாகனம் ஓட்டி வருகிறேன். விபத்தை பொருத்து யார் சொன்னது என்றால் நான் டீக்கடையில் இருந்தேன். சத்தம் கேட்டு போய் பார்த்தேன். அங்கு சென்று பார்த்த பிறகு தான் அவர் எனது உறவினர் என்று தெரியும். அப்போது லைட்டாக இருட்டாக இருந்தது. நான் அங்கு போய் பார்க்கும்போது சுமாராக 10 நபர்கள் இருந்தார்கள். போலீசார் என்னை சம்பவ இடத்தில் வைத்து சம்பவம் நடந்த அன்றே விசாரணை செய்தார்கள். அதற்க்கு பின்னிட்டு என்னை விசாரணை செய்யவில்லை. போலீசார் என்னை விசாரிக்கும்போது விபத்து ஏற்ப்படுத்திய நபரை பற்றி நான் கூறவில்லை. விபத்து நஷ்ட ஈடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். நஷ்ட ஈடு பெற வேண்டும் என்பதற்க்காகவும் இறந்தபோன நபர் எனது உறவினர் என்பதாலும் நான் பார்க்காத சம்பவத்தை பொருத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

Distirct Munsif cum
Judicial Magaistrate

SHANMUGANATHAN Digitally signed by SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி.சி.எண்: 14/2017**

**அ.சா : 5(பிரகாஷ்)**

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 18.02.2025.**

**எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317—ன் கீழ் மனுதாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**<u>சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் TATA Ace வாகன ஓட்டுனராக உள்ளேன். எனது வீடு ஊருக்குள் உள்ளது. விபத்து நடைப்பெறும் போது இருட்டாக இருந்தது என்றால் சரிதான். நான் போய் பார்க்கும்போது அங்கு சுமார் 20, 30 நபர்கள் இருந்தார்கள். நான் போகும்போது ஆம்புலன்ஸ் எல்லாம் வந்திருந்தது என்றால் சரிதான். என்னோடு தான் நாராயணன், சக்திவேல் மற்றும் உறவினர்கள் வந்தார்கள் என்றால் சரிதான். நான் சென்றவுடன் மருத்துவமனைக்கு கொண்டு சென்றுவிட்டார்கள். போலீசார் என்னை அன்றைய தினமே அங்கே வைத்து விசாரித்தார்கள். அதற்க்கு பின்னிட்டு விசாரிக்கவில்லை. போலீசாரிடம் எதிரியை குறித்து நான் எதுவும் சொல்லவில்லை. நான் இறந்துபோன நபரின் உறவினர் என்றால் சரிதான். விபத்து நஷ்ட ஈடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். நஷ்ட ஈடு பெற வேண்டும் என்பதற்க்காகவும் இறந்தபோன நபர் எனது உறவினர் என்பதாலும் நான் பார்க்காத சம்பவத்தை பொருத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

SHANMUGANATHAN
Distirct Munsif cum
Judicial Magaistrate
Digitally signed by
SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.**

**(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)**

**சி.சி.எண்: 14/2017**

**அ.சா : 7(சிவலிங்கம்)**

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 18.02.2025.**

**எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317–ன் கீழ் மனுதாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து நடந்தபோது இருட்டாக இருந்தது என்றால் சரிதான். பின்னால் அடிப்பட்டதால் மயக்கமாகிவிட்டேன் என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

Distirct Munsif cum
Judicial Magaistrate

SHANMUGANATHAN Digitally signed by SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.